**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE SHOLINGANALLUR**

**RLTOP. No.46/*2024***

Deposition of Witness for Plaintiff/Defendant Solemnly Affirmed by Tmt. S.Ramalakshmi, Assistant in accordance with the provisions of Act X of 1873 on 07.01.2026

| | | | |
|---|---|---|---|
| Name | விஜயராஜன் | Religion | |
| Father Name | பத்மநாபன் பிள்ளை | Age | |
| Village | | Calling | |
| Taluk | | | Rw3 |

<u>மனுதாரர் தரப்பு  குறுக்கு விசாரணை</u>**:**

1. பத்மநாபன் பிள்ளைக்கு நான் இரண்டாவது மகன் ஆவேன். பத்மநாபன் பிள்ளையின் மூத்த மகன் தியாகராஜன் சென்னையில் தான் வசித்து வருகிறார். எனது பெற்றோர்கள் தனியாக தான் வசித்து வருகின்றனர். எனது பெற்றோர்கள் திருவான்மியூரில் குடியிருந்து வந்தனர். நாங்கள் சோழிங்கநல்லூரில் குடியிருந்து வருகிறோம். எனது தந்தை இறந்த பின்பு எனது தாயார் திருவான்மியூரில் தான் வசித்து வந்தார். கடந்த ஆண்டு எனது தாயரும் இறந்து விட்டார். எனது தந்தை இறக்கும்பொழுது எந்த உயிலும் எழுதி வைக்கவில்லை. அதற்கு முன்பாக எங்களுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார். எனது தந்தை பத்திர எழுத்தாளராக இருந்தார். கிராம நிர்வாக அலுவலராக இருந்தார் . மோகன் குமாரின் தந்தை எனது அப்பாவின் நெருங்கிய நண்பர். விற்பனை ஒப்பந்த பத்திரம் 2006 ஆம் ஆண்டு எழுதப்பட்டது.  தேதி மற்றும் மாதம் நியாபகம் இல்லை.

2. நான் பத்திர எழுத்தாளராக வேலை செய்து வருகிறேன். சொத்தை வாங்க விற்க ஆலோசகராக உள்ளேன். நான் பதிவு பெற்ற ஆவண எழுத்தாளர் இல்லை என்றால் சரிதான். எனது தந்தை எம்பெருமாள் மற்றும் ஏழுமலைக்கு கிரையம் செய்து வைத்த பத்திரத்தில் மொத்தம் எத்தனை சொத்துக்கள் என்றால் மூன்று சர்வே நம்பர் அதில் இரண்டு சர்வே நம்பர்கள் கிரயம் செய்து கொடுத்தார். ஒரு சர்வே எண்ணில் கிரையம் செய்து கொடுக்கவில்லை. எனது தகப்பனார் மனுதாரர் மோகனுக்கு 29.03.2006 அன்று விக்கிரய ஒப்பந்தம் செய்து வைத்த பத்திரத்தை நான் பார்த்துள்ளேன். அதில் நான் சாட்சியாக கையொப்பமிட்டுள்ளேன். மற்றொருவர் சாட்சியாக கையொப்பம் செய்தவர் செல்வராஜ் ஆவார். எனது தந்தைக்கு பொது அதிகார பத்திரத்தை மனுதாரர் மோகன் குமார் அவரது சகோதரி மேரிவிஜிலா மற்றும் ஆல்பர்ட் துரைராஜ் ஆகியவர்கள் தனித்தனியாக பொது அதிகார பத்திரத்தை கொடுத்தனர்.

3. மனுதாரர் மோகன் குமாருக்கு மூன்று சர்வே எண்களில் இரண்டு சர்வே எண்கள் பத்திரப்பதிவு செய்யப்பட்டது. ஒரு சர்வே எண் பத்திரப்பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்த ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். 20.08.2021 அன்று எனது தந்தை இறந்து விட்டார். எனக்கு இந்த பத்திரப்பதிவு மற்றும் கிரைய ஒப்பந்த ஆவணத்தில் நிறைய தொடர்பு உள்ளது. நான் இன்று சாட்சி அளிக்க வந்த விவரம் எனது சகோதரருக்கு தெரியாது என்றால் சரிதான். எனது சகோதரர் நீதிமன்றத்திற்கு சாட்சி அளிக்க வருவாரா என்றால் அழைத்தால் வருவார். சர்வே எண் 111/6,7 ஆகிய இரண்டு ஐட்ட சொத்துக்கள் எம்பெருமாள் மற்றும் ஏழுமலைக்கு கிரயம் செய்யப்பட்டது. அந்தக் கிரைய ஆவணத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். அந்தக் கிரைய ஆவணம் பதிவு செய்யும் பொழுது நான்

பதிவு அலுவலகத்தில் தான் இருந்தேன். எனவே அந்தக் கிரைய ஆவணத்தை பற்றி எனக்கு தெரியும்.

4. அந்த பத்திரத்தில் சிவசுப்பிரமணியம் மற்றும் எனது தாயார் சாட்சியாக கையொப்பம் உள்ளனர். 30.12.2011 அன்று செய்யப்பட்ட கிரைய ஆவணத்தில் உள்ள சரத்துக்கள் பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்தக் கிரைய ஆவணத்தில் கிரைய ஒப்பந்தத்தை பற்றி குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. இந்த சொத்துக்களை எனது தகப்பனார் சதுர அடி கணக்கில் விலை நிர்ணயம் செய்து கொடுக்கவில்லை ஒரு கிரவுண்ட் 49 லட்சம் என்று விலை பேசினார். கிரைய ஒப்பந்தத்தை எனது தந்தைக்கு மோகன் குமார் அவரது சகோதரி மற்றும் ஆல்பர்ட் துரைராஜ் ஆகியர்கள் எழுதிக் கொடுத்தனர். அந்த கிரைய ஒப்பந்தத்தை நானும் கோபால் ராம், ஏழுமலை, எம்பெருமாள் ஆகியோர் நால்வரும் சேர்ந்து கொண்டு நில அபகரிக்க திட்டமிட்டு செய்யப்பட்ட ஒப்பந்தம் என்றால் சரியல்ல.

5. நான் பத்திர எழுத்தாளர் என்பதால் நான் தான் இந்த நிலை மோசடிக்கு மூளையாக செயல்பட்டு எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எம்பெருமாள் மற்றும் ஏழுமலைக்கு எழுதி கொடுத்த சர்வே எண்111/5,6,7 ஆகிய இடத்திற்கு தெற்கு புறமாக ஆறு அடி அகலம் உள்ள பாதை கிழக்கு மேற்காக செல்கிறது என்றால் சரிதான். அந்தப் பாதை மோகன் குமார் மற்றும் அவர் குடும்பத்திற்கு இடையே பாகப்பிரிவினை செய்த பொழுது வசதியின் அடிப்படையில் அந்தப் பாதை பட்டா நிலத்தில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்111/5,6,7 ஆகிய இடங்களுக்கு வடக்கு புறத்தில் எம்பெருமாள் மற்றும் ஏழுமலைக்கு அங்கு கிரையம் பற்றிய

இடம் உள்ளது என்றால் சரிதான். 30.12.2011 சர்வே எண்111/6,7 வாங்கும் பொழுது அதற்கு நான்கு எல்லைகள் போடப்பட்டது என்றால் சரிதான்.

6. அந்தக் கிறைய ஆவணத்தில் 111/5 மோகன்குமாருக்கு சொந்தமான நிலம் என்று தான் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். உண்மையாகவே சர்வே எண்111/5 கிரையஒப்பந்த மூலம் வாங்கப்பட்டிருந்தால் 30.11.2011 பதிவு செய்யப்பட்ட கிரையஆவணத்தில் கிழக்கு கிரைய ஒப்பந்த மூலம் பதிவு செய்யப்பட்ட நிலம் எங்களுக்கு சொந்தமான நிலம் என்று குறிப்பிட்டு இருப்பேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் கடை நடத்தி வரும் காலம் இந்த மோகன் குமார் குடும்பத்தினரால் வாடகை ஒப்படைப்பு செய்யப்பட்டது என்றால் சரிதான். 2011 இல் கிரைய ஆவணம் பதிவு செய்த பொழுது புல எண் 111/5 பொருத்து எம்பெருமாள் மற்றும் ஏழுமலையான் கரையதொகை கொடுக்கவில்லை என்பதால் அந்த இடத்தை விடுத்து மற்ற இடங்களை கிரையம் செய்து கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. சர்வே எண்111/5,6,7 ஆகியவைகளுக்கு ஒரே கைடு லைன் வேல்யூ என்றால் சரியல்ல.

7. ஒன்று சாலைக்கு அருகில் உள்ளதால் அதற்கு அரசு வழிகாட்டு மதிப்பு அதிகம். சாலைக்காக அரசு வழிகாட்டு மதிப்பு மாறாது என்றாலும் சர்வே எண் மாறும் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சி அளித்தால் குற்றம் என்றால் அதைப் பற்றி தெரியும் என்றால் சரிதான். 2025 எம்பெருமாள் மற்றும் ஏழுமலை செங்கல்பட்டில் உள்ள நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். எந்த நீதிமன்றம் என்று எனக்கு தெரியாது. நான் எனது முதல் விசாரணையில் குறிப்பிடுவது அனைத்தும் தவறானது என்றாலும் நான் சொத்துக்களை அபகரிப்பதால் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>:** இல்லை

Sd/– M.N.ராஜநந்திவர்மசிவா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதிமன்றம்,
சோழிங்கநல்லூர்.